பெயர் : முனைவர் க.சு.சிவகாமசுந்தரி

துறை : தமிழ்த்துறை

பாடம் : தமிழர் மானிடவியல்

அலகு : 3

ஆண்டு : முதுகலை முதலாம் ஆண்டு

பருவம் : இரண்டாம் பருவம்

Subject code : 18MTA24C - U3

# சடங்குகள்


மானிட வாழ்வானது கால ஓட்டத்தோடு இணைந்த பிறப்பு இறப்பு பிறப்பு சுழற்சி தன்மை கொண்டது பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் இளமை, பருவம் அடைதல், முதுமை என்னும் வரிசையில் நிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன.

இந்த உயிரியல் நிலை மாற்றங்கள் பண்பாட்டு பயப்படுகின்றன உயிரியல் தளத்தில் நிகழும் இந்த நிலை மாற்றங்கள் இணை நிலையாக சமூக பண்பாட்டுத் தளத்தில் சடங்குகள் வழி வெளிப்படுகின்றன இன்னும் சொல்லப்போனால் உயிரியல் தளத்தைக் காட்டிலும் பண்பாட்டுத்தளத்தில் வாழ்வின் நிலை மாற்றங்கள் மேலும் நுண்மையாக பெற்று பல்கிப் பெருகி விடுகின்றன ஒவ்வொரு நிலைமாற்றமும் ஒரு சடங்கு நிகழ்வோடு பண்பாட்டு பயன்படுகின்றது அல்லது சடங்கு பயன்படுத்தப்படுகின்றது

சடங்கு குறித்த அறிஞர்களின் வரையறைகள்

துர்கைமின் சமய வாழ்வின் தொடக்க நிலைகள் எனும் நூல் தொடங்கி வான்கென்னப்,எட்மண்ட்லீச், விக்டர் டர்னர் எழுத்துக்கள் வரை சடங்கு என்பது பலவாறாக வரையறுக்கப்பட்டுள்ளது.

- சடங்கு என்பது சிறப்புக்குரிய வாழ்வில் குறியீட்டு அளவில் பொருத்தமான நடத்தை முறைகளுடன் தன்னார்வமாக நிகழ்த்தும் ஒரு நிகழ்வாகும் என்கிறார் ரோத்தன்பூலர்.
- சடங்குகள் குறித்த கோட்பாட்டியல் சிந்தனை-
- 1. சடங்குகளின் செயல்பாட்டு தன்மைகளை முன்னிலைப்படுத்தி சடங்குகளை வரிசைப்படுத்திய முறை
- 2. சடங்குகளின் அமைப்புரீதியான பண்புகளை முன்னிலைப்படுத்திய பகுப்பாய்வு முறை
- சடங்குகளின் செயல்பாடுகளையும் தன்மைகளையும் முன்வைக்கும் முதல் வகையானது அனுபவ வழியில் அறிவது இதனால் ஒவ்வொரு சடங்கும் ஒரு தனித்த பங்கு பண்பு செயல் காரண காரியம் உண்டு என்னும் வகையில் விளக்க முயன்றதால் ஒவ்வொரு சடங்கும் ஒரு தனிப்பட்ட வகையாகும். மிகவும் தொடர்புடைய சடங்குகள் மட்டும் ஓர் இனமாக கணக்கிடும் முறை இந்த அணுகுமுறையில் பின்னர் ஏற்பட்டது.
- அர்னால்ட வான் கென்னப்-1. பிரித்தல் சடங்குகள் 2. நிலை மாற்றும் சடங்குகள் 3. இணைத்தல் சடங்குகள் என மூன்று வகையாகப் பகுத்தார். முதல் மகிழ் சடங்குகள் ஒருவரை அவருடைய பழைய தகுதி நிலையிலிருந்து பிரிக்கும் நிகழ்வைக் குறிக்கும் இரண்டாம் வகை அவருடைய தகுதி நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தும் நிகழ்வைக் குறிக்கும். மூன்றாம் வகை சடங்குகள் அவருக்கு சார்த்தப்படும் புதிய தகுதியை குறிக்கும்.




- பழந்தமிழ் பண்பாட்டில் குழந்தைப் பருவத்தை காப்பு செங்கீரை தால் சப்பாணி முத்தம் வருகை அம்மானை சிறுபறை சிற்றில் சிறுதேர் என மிக அதிக அளவில் வகுத்துள்ள பண்பாடு தமிழருடையதே பெண்ணின் வாழும் காலத்தை பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண் எனும் பகுப்பும் தனித்துவமாக உள்ளது.
- எமிலி துர்க்ஹைம்- மனிதர்கள் தங்களின் சமூக வாழ்வைப் பற்றிய புரிதலில் சடங்கு போன்றதொரு அடிப்படையான எளிய வடிவங்களையோ கருத்துக்களையோ கண்டுபிடிப்பார்கள். இது சமூகத்தின் ஒட்டுமொத்த ஓர்மையுடன் காணப்படுவதால் இதனைக் கூட்டு நனவிலி மனம் எனலாம் என்றார்.
  1. ஆக்க நிலை சடங்குகள் 2. எதிர்நிலை சடங்குகள் என இரு வகைப்படுத்தினார்.
     - ஆக்க நிலை சடங்குகள் இறைவனோடு புனித தளத்தோடு இணைவதற்கு தொடர்பு கொள்வதற்கும் செய்யப்படும் அனைத்து வகை சடங்குகளும் ஆகும் எதிர்நிலை சடங்குகள் புனித தளத்திற்கும் இயல்பு தளத்திற்கு மான வேறுபாட்டை வலியுறுத்த ஆக்க நிலை சடங்குகள் இயல்பு தளத்தை புனித தளத்தோடு இணைக்க முயலுகின்றனர் சிக்மண்ட் ஃப்ராய்டும் இதே வகையிலான போக்கில் சடங்குகளை குறையும் விளக்கும் எனும் நூலில் வகைப்படுத்துகிறார் இதில் குலகுருவான உயிர்பலி சடங்கு என்பது ஆதி காலத்தில் ஏற்பட்ட தொழில் படிவ தந்தை கொலையை மீண்டும் மீண்டும் நிகழ்த்துதல் ஆகும் என்கிறார் சடங்கில் மூலமாக குறியீடுகள் வெளிப்படும் என்பதை உளப்பகுப்பாய்வு வழியும் அறிய இயலும் என்பது கூடுதல் புரிதலாக அமைகிறது இருவருமே அந்த பண்பாட்டின் பிரபஞ்ச ஒழுங்கை அமைப்பு ஒழுங்கை நிலை பெறச் செய்வதில் ஆக்கநிலை சடங்குக்கு எதிராக எதிர்நிலை சடங்குகள் செயல்படுகின்றன என்றனர்.

- **திருமணம்குறித்த லெவி ஸ்ட்ராஸ் இன் அமைப்பியல் விளக்கம் இயற்கை பண்பாடு என்னும் அமைப்பு நிலையில் இருந்து தொடங்குகிறது.**
- ஹோவல் டாய் - 1913 இல் எழுதிய சமயத்தின் வரலாறு பற்றி ஓர் அறிமுகம் என்னும் நூலில் தொடர்புடைய சடங்குகளை ஓரினம் ஆகி சடங்குகளை செயல்பாட்டின் அடிப்படையில் நான்கு நிலைகளில் வகைப்படுத்தினார் முதல் அணுகுமுறையாக செயல்பாட்டு நிலையில் கணக்கிடும் முறையாகும் உணர்வு சார்ந்தது நிகழ்த்துதல் சார்ந்தது சமய நடனங்கள் ஆட்டங்கள் சார்ந்தது சமய பேரணி சார்ந்த அங்கப்பிரதட்சனம் சார்ந்தது இவை போன்ற பிற சடங்குகள்.
- 1. உடலின் வரைதல் கலை சார்ந்தது நோய் நீக்குதல் சார்ந்தது: உடலில் ஒப்பனை செய்து நோய் நீக்கும் சடங்குகள். குயவர்கள் செம்மன் கொண்டு உடலில் அக்கி எழுதி உடற்கட்டிகளை நீக்குதல் போன்றவை இதில் அடங்கும்.
- பொருளியல்: வேட்டை வேளாண் தொழில்களில் மேற்கொள்ளப்படும் சடங்குகளும் மழை வருவித்தல் போன்ற சடங்குகளும் இதில் அடங்கும்.
- தீமை நீக்குதல்: வல்லமை உள்ள தீய ஆவிகள் பற்றிக் கொள்ளாமல் இருக்கவும் தொற்றிக் கொண்ட ஆவிகளால் ஏற்பட்டுள்ள தீமைகளை நீக்கவும் செய்யும் சடங்குகள் இன்னொரு வகையாகும்.
- பூப்பு ஏற்பு சடங்கு: வயதுக்கு வரும் சடங்கும் சமூகத்திற்குள் ஒரு உறுப்பினராக அங்கீகரித்து அழைக்கும் சடங்குகளும் மற்றொரு வகையாகும். அந்தோணி வாலஸ்
- **அமெரிக்க மானிடவியலாளர் ஆன இவர் சடங்குகள் பற்றி கூறும் போது இவை பண்பாட்டு படிமலர்ச்சி என் வளர்ச்சியை பிரதிபலிக்கும் ஒரு கூறாக இருக்கின்றன என்கிறார் இவர்தம் கருத்துப்படி மனித சமூகத்தின் நான்கு சமய முறைகள் வளர்த்து எடுக்கப்பட்டுள்ளன அவற்றை cult(வழிபாட்டு மரபு) என்று வரையறை செய்கிறார். அவை 1. தனிமனித வழிபாட்டு மரபு 2.**

மாந்திரீக வழிபாட்டு மரபு 3. சமூகம் சார்ந்த வழிபாட்டு மரபு 4. மதகுரு கோயில் சார்ந்த வழிபாட்டு மரபு.

- மெர்குரி எடுத்துக்காட்டுகள் பணி அந்தோணி வாலு ஒரு மாறுபட்ட கருத்தை முன்வைத்தார் ஒரு சமூகத்தின் முக்கிய சடங்குகள் சமூக பண்பாட்டு வளர்ச்சியின் போக்கை காட்டுவதாக இருக்கும் என்றார் இன்னொரு வகையில் சொல்வதானால் சமூக பண்பாட்டு வளர்ச்சியின் மிக நீண்ட பாதையில் குறிப்பிட்ட சடங்குகள் சமூகத்தின் படிமலர்ச்சி கட்டத்தை காட்டுவதாக அமையும் என்றார். இவர் சடங்குகளை1. தொழில் நுட்பச் சடங்குகள்2. கருத்தியல் சடங்குகள் என இரு வகைகளாக பகுத்தார்.
  ரெனொல்டு கிரீம்ஸ்
- சடங்கு ஆய்வுகளின் தொடக்கம் என்னும் ஆய்வில் 1. நிலைப்படுத்தும் சடங்குகள் 2. நிலை மாற்றும் சடங்குகள் என இருவகை படுத்துகிறார்.
  அந்தோணி குட்
- இவர்தமிழகத்தில் மறவர்களின் சடங்குகளை ஒப்பாய்வு செய்து பெண் மணமகன் என்னும் தலைப்பில் மிகச்சிறந்த கோட்பாட்டு புரிதலை வழங்கியுள்ளார் இன்றைய தமிழ்ப் பண்பாட்டின் நான்கு முக்கிய வாழ்க்கை வட்டச் சடங்குகள் மூலம் பின்வரும் நிலை மாற்றங்கள் நிகழ்கின்றன.



இதுபெண்களின் தரநிலைகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன என்பதை சுட்டுகிறது.
அடுத்ததாக வாழ்க்கை வட்டச் சடங்குகளில் நான்கு முக்கியமான கருத்தாக்கங்கள் சடங்கின் தன்மையையும் வகையையும் நிர்ணயிக்கின்றன 1 மங்களமானது 2. அமங்கலமானது 3. தூய்மை சார்ந்தது 4. தீட்டு சார்ந்தது.

விக்டர் டர்னர்

- சடங்குகளை மீவியல் பண்பாகவும் அமைப்பு எதிர் அமைப்பாகவும் திருவிளையாடல்கள் மூல உருவகங்கள் மீசமூகம் போன்ற கருத்தாக்கங்களாகவும் ஆராய்கிறார். இவருடைய ஆய்வானது சடங்கு தொடங்கி யாத்திரை வரை விரியும் பரந்த தளமாகும்.
- பொங்கல் இடுதல் தமிழரின் மூலப்படிம குறியீடு- படிநிலை பொருண்மை - இறப்பு முன்னோர் வழிபாடு சடங்குகள்- பூரண கும்பம் சடங்குகளில் பெரிதும் மஞ்சள்
- இடம்பெறுகின்றன.


உற்பத்தி முறைகள்

- உணவு சேகரித்தல்

1. வேட்டையாடுதல், 2.காய் கனி பட்டை கொட்டை கிழங்கு தேன் போன்ற இன்னும் பிற காட்டு பொருட்களை சேகரித்தல், 3. மீன் பிடித்தல்
   உணவு உற்பத்தி
   1. ஆயர் வாழ்வு 2. காட்டெரிப்பு வேளாண்மை 3. தோட்டப்பயிர் ,4. நீர்ப் பாசன வேளாண்மை
      1. சுற்றித்திரியும் சமூகங்கள்
      2. பழங்குடிச் சமூகங்கள்
      3. மையத் தலைமை சமூகம்
      4. நாட்டரசு என்பன பல்வேறு பிரிவு மானுடவியலாளர்கள் பயன்படுத்தக்கூடிய வகைப்பாடு.

**மார்க்சிய அணுகுமுறை**

1. **உறவுமுறை சார்ந்த உற்பத்தி**
2. **மானிய திறை செலுத்தும் உற்பத்தி**
3. **முதலாளித்துவ உற்பத்தி**



ஆண் பெண் தொழில் பகுப்பு

தொழில் பகுப்பில் பாலின பாகுபாடு - பொருளும் பண்பாடும்- புழங்கு பொருட்கள் பால் அடிப்படைகளும்.- ப்ரோ வரின் கோட்பாடு- கைவினை தொழில்களும் பால் பாகுபாடும்- மூலப் பொருட்கள் கிடைக்கும் இடம் , செயல்முறையின் பொருண்மை (நீர்*நெருப்பு ) – உடலும் உற்பத்தியும் (ஒரு முறை உற்பத்தி*மீண்டும் மீண்டும் உற்பத்தி) - கருவியின் பொருண்மை (கத்தி*சக்கரம்: ஆண்*பெண்)தொழில் குழுக்கள் (வலங்கை*இடங்கை)

சாதியத்தின் தோற்றம்

1. மரபு க் கொள்கை
2. தொழிற்கொள்கை
3. சமயக் கொள்கை
4. அரசியல் கொள்கை
5. இனக் கொள்கை
6. படிமலர்ச்சி கொள்கை

   சாதியம் நவீன கோட்பாடுகள்

   கருத்தியல் வாத நிலை- பொருள்முதல்வாத நிலை

   சமஸ்கிருத மயமாதலும் மாற்று கோட்பாடுகளும்

   - பிராமண வகை உயர்குடி ஆக்கம்
   - சத்ரிய வகை உயர்குடி ஆக்கம்
   - வைசிய வகை உயர்குடி ஆக்கம்
   - சூத்திர அல்லது அரிசன வகை உயர்குடி ஆக்கம்
   - திராவிட உயர்வு வாதம்